**நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல்செயற்திட்டம் (உடன்படிக்கை இலக்கம் - 0486 எஸ்ஆர்ஜ) - 2023**

---

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 0486-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சக்தி மற்றும் வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வரையறுத் லங்கா மின்சார (தனியார்) கம்பனி செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மேல் மாகாணத்தில் புதுப்பிக்க்கூடிய சிறிய மின்வலு நிலைய முறைமைகளை நிர்மாணிப்பதன் ஊடாக கலந்த புதுப்பிக்கக்கூடிய மின் நிலைய முறைமைகளை தாபிப்பதற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் புதுப்பிக்கக்கூடிய சிறிய உப நிலைய முறைமைகளை தாபித்தல் பெயரின் கீழ் இக்கூறு அமுலாக்கப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர்31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பழரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை /கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனிக்கும் மொறட்டுவ பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) | | | |
| | (i) பிரிவு 7 | ஒப்பந்தம் கைச்சாத்திட்ட (MOU) பினனர் குறைந்தது 3 மாதங்கள் தாமதமல்லாது தரப்பினர்களிற்கிடையில் கைச்சாத்திட்ட இணைந்து வேலை செய்கின்ற சட்ட பிரதிபலிப்பு உடன்படிக்கை (MOU)தரப்பினருக்கு இடையில்இணைந்து செயற்படுகின்ற சட்ட பிரதபலிப்பு ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டும். 2028 ஒக்தோபர் 16 இல் MOUகைச்சாத்திடப்பட்ட போதிலும் MOU கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகள் தாமதத்துடன் இணைந்த சட்ட பிரதிபலிப்பு ஒப்பந்தம் 2024 மார்ச் 27 இல் கைச்சாத்திடப் பட்டிருந்தது. மேலும் செயற்திட்டமானது மேற்குறித்த ஒப்பந்தம் 2022 செப்தெம்பர் 02 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | நிதியளிப்பு பொறி முறையின் தாபிப்பு மற்றும் கைதவிர்த்தல் ஆராய்ச்சி,O&M ஒப்பந்த முகாமை, தேறிய கணக்கு மற்றும் மீட்டர் முறைமையை சரிசெய்தலிற்காக சூரிய சக்தி மின்னுருவாக்கலை வடிவமைத்தல் போன்றவற்றிலுவள்ள தாமதம் காரணமாக தற்போது MOU கைச்சாத்திடுவதில் தாமதம் நிலவியது. | MOU இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii)பிரிவு 1 மற்றும்பிரிவு 3.9 | இணையதளத் விருத்தி செய்யபபட்டு பேணப்பட வேுண்டியிருந்தது. இந்த உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட சிறிய நுண் மின்நிலைய செயற் திட்டத்திலிருந்தான தரவு, ஏதாவது ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மற்றும் முற்பணங்கள் என்பன குழுவின் விதப்புரைகளில் பொதுவாக சகல பொது மக்களிற்கும் கிடைக்கக்கூடும். | இணையதளம் சிறிய மின்நிலைய ஆய்வு கூடங்களில் நவீன அபிவிருத்திகளுடன் விருத்தி செய்யப்படும். | MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணையதளம் உள்நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள், சர்வதேச பல்கலைக் கழகங்கள் மற்றும ஆராச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக அக்கறையுடைய ஏனைய தனியார் மற்றும் அரச வருகைளார்கள் தனியார் என்போருடன் இணைந்து பயன்படுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இணையதளம் இன்னமும் விருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii)பிரிவு 3.8 | நெறிப்படுத்தல் குழு காலாண்டிற்கு ஒருதடவை கூட்ப்பட வேண்டியதுடன் உடன்படிக்கையின் கீழான செயற்திட்ட நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும். குழுவானது நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குழு எவ்வித கூட்டங்களையும் நடாத்தியிருக்கவில்லை. | R&D நடவடிக்கை களிற்காக செயற்பாட்டு உடன்படிக்கை மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் இன்மையால் நெறிப்படுத்ல் குழுவின் நடவடிக்கைகள் மிகவும் வரையறைபடுத்தப் பட்டுள்ளதுடன் அவர்களுடைய ஆரம்ப எதிர்வுகூறல் செயற்திட்ட அமுலாக்கல் மற்றும் மானயம் வழங்கலில் தீர்மானம் எடுத்தலில் இருந்தது. | நெறிப்படுத்தல் குழுவானது MOUஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iv) பிரிவு 3.10 | குழுவானது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அடுத்துவரும் ஆண்டிற்காக முறையான ஆராய்ச்சி பரிந்துரைகளை செய்ய வேண்டியதுடன் ஆராய்ச்சி திட்டம் மற்றும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி யாக்கப்பட்ட போதிலும் மேற்குறித்த வேண்டுகை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், 3.12 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்தருக்கவில்லை. . | ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந் ததுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியம் ஏற்கனவே தாபிக்கப் பட்டிருந்தது. இதன்படி ஆாரய்ச்சி பாதீட்டு ஒதுக்கப்பட்டதுடன் ஆராய்ச்சி பரிந்துரைகளிற்கான அழைத்தலை UOM திறந்திருக்கும். | தாமதமில்லாமல் MOU இன் வேண்டுகையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஏனைய விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | உடப்பந்த்தின் பொது நிபந்தனைகளின் 13.3.3 ஆம் பிரிவு மற்றும் ஒப்பந்த வேலைகளின் (வடிவமைப்பு, வழங்கல், புதுப்பிப்பகூடிய மின்சக்தி சிறிய மின்நிலை முன்னோடி செயற்திட்டம்) விசேட நிபந்தனைகள் என்பவற்றின் பிரகாரம், செயலாற்றல் பிணைமுறி பூர்த்தியாக்குவதற்கு வழங்கப்பட்ட தனியான காலப்பகுதியின் பின்னர் வசதிகளின் ஒருபகுதியான ஒப்பந்த விலைக்கு சார்பாக கழிப்படவேண்டியிருப்பின் பயனற்ற மற்றும் செலலுபடியற்றதாக இருக்கும். வசதிகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் 540 நாட்களோ அலலது 365 நாட்கள் செயற்பாட்டு ரீதியான வசதிகளை ஏற்றலின் பின்னர் முதலில் ஏற்படும்.<br><br>பூர்த்தியாக்கல் சான்றிதழ் மற்றும் செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் சான்றிதழ் என்பன முறையே 2022 செப்தெம்பர் 02 மற்றும் 2022 செப்தெம்பர் 16 இல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப செயலாற்றல் பிணைமுறி 2022 பெப்ரவரி 28 இல் காலாவதியாகி இருந்தது எவ்வாறாயினும், செயற்பாடு ஏற்றலின் பின்னர் 2022 பெப்ரவரி 28 இலிருந்து 365 நாட்களிற்கு நீடிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறி (2023 செப்தெம்பர் 16) பெறப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளருடைய கருத்துரைகளுடன் உடன்படுகின்றோம். செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப் பட்டிருந்தமையால் மேற்படி எவ்வித பிரச்சனைகளும் ஏற்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 13.3.3 ஆம் பிரிவு மற்றும் வேலை ஒபபந்தத்தின் விசேட நிபந்தனைகள் என்பவற்றுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) | அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டமானது, 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் வேலை ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட ஆரம்ப கால அட்டவணைப் பிரகாரம்,LECO சிறிய மின்நிலைய முன்னோடி செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட பூர்தியாக்கல் திகதிகள் 2021 செப்தெம்பர் 18 மற்றும் LECO R & D ஆய்வுகூடம் 2021 சனவரி 17 ஆக இருந்தது.<br>எவ்வாறாயினும், பூர்த்தியாக்கல் சான்றிதழ் ஆரம்ப எதிர்பார்க்கப்பட்ட பூரத்தயாக்கல் திகதியிலிருந்து 11 மாதங்கள் தாமதத்துடன் 2022 செப்தெம்பர் 02 இல் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளருடைய கருத்துரைகளுடன் உடன்படுகின்றோம். செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப் பட்டிருந்தமையால் மேற்படி எவ்வித பிரச்சனைகளும் ஏற்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை விஞ:ஞாபனம் மற்றும் மானிய உடன்படிக்கையின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |